# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் – 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## திருவண்ணாமலை – விழுப்புரத்தில் இன்று உரையாற்றுகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், மூன்றாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 6-ஆம் தேதி புதுச்சேரியில் தொடங்கினார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவண்ணாமலை - விழுப்புரத்தில் இன்று உரையாற்றுகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **08.04.2026 (புதன்கிழமை)** | | |
| மாலை 4 மணி | திருவண்ணாமலை (பொதுக்கூட்டம்) | உளுந்தூர்ப்பேட்டை, ரிஷிவந்தியம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, செங்கம், திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம், போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி |
| மாலை 7 மணி | விழுப்புரம் (பொதுக்கூட்டம்) | திண்டிவனம், வானூர், விழுப்புரம், விக்கிரவாண்டி, திருக்கோவிலூர், செஞ்சி, மயிலம் |
| **09.04.2026 (வியாழக்கிழமை)** | | |
| மாலை 5 மணி | மறைமலை நகர் (பொதுக்கூட்டம்) | செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம், உத்திரமேரூர், தாம்பரம், பல்லாவரம், மதுரவாயல், அம்பத்தூர், ஆலந்தூர், திருபெரும்புதூர், காஞ்சிபுரம் |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்லவேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 05.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

### பிரதமர் மோடி எத்தனை முறை சுற்றிச் சுற்றி வந்தாலும்

# தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற முடியாது!

## மதுரையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேட்டி!

மதுரை, ஏப். 8 -

மதுரையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திரைப்பட பின்னணி பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் சிலை முன் அவரது பாடல்களைப் பாடி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வாக்கு சேகரித்தார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பழைய திரைப்படப் பாடல்கள் குறிப்பாக டி.எம்.சௌந்தரராஜன் பாடல்களுக்கு தீவிர ரசிகர்.

சமீபத்தில் சென்னை வந்திருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பேபியை சந்தித்துப் பேசிய பின் வைகோ அளித்த பேட்டியில்,

'இருவரும் பழைய திரைப்படப் பாடல்களுக்கு ரசிகர்கள். பாவமன்னிப்பு, பாலும் பழமும் பாடல்களைக் கேட்டோம்' என்று கூறினார்.

இந்நிலையில், 'மதுரை தெற்கு தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் பூமிநாதன் மதுரை முனிச்சாலை பகுதியில் உள்ள மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகத்தில் வைகோ முன்னிலையில் நேற்று முன்தினம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

பின்னர், அப்பகுதியில் உள்ள



திரைப்பட பின்னணி பாடகர் டி.எம். சௌந்தரராஜன் சிலை முன் அவரது பாடல்களை பாடி வைகோ வாக்கு சேகரித்தார்.

'உள்ளம் உருகுதய்யா..', 'கற்பனை என்றாலும்...' ஆகிய பாடல்களை பாடினார். கூட்டத்தினர் கைதட்டி வரவேற்றனர்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி 200 இடங்களுக்கு மேல் உறுதியாக வெற்றி பெறும்.

மதுரை தெற்கு தொகுதியில் பூமிநாதன் 30 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்.

சாதி, மதம், கட்சி எல்லைகளை கடந்து, 5 ஆண்டுகளாக தொகுதி மக்கள், நாடி வந்த அனைவருக்கும் பிரதிபலன் எதிர்பாராமல் பணிபுரிந்துள்ளார். டி.எம்.சௌந்தரராஜன் சிலை அமைத்தது உட்பட பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளார்.

பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், பிற மத்திய அமைச்சர்களும் தமிழ்நாட்டுக்குள் எத்தனை முறை வந்தாலும், எத்தனை தொகுதிகளில் சுற்றி வந்தாலும் வெற்றிபெற முடியாது.

பிரதமர் விமானத்தில் வருகிறார். ரோடு ஷோ செல்கிறார். அப்போது அவர் வாகனத்தை ஏன் சோதனையிடவில்லை. எல்லோருக்கும் ஒரே அளவுகோல் இருக்க வேண்டும். பிரதமர், உள்துறை அமைச்சர், பிற மத்திய அமைச்சர்களின் வாகனங்களையும் சோதனையிட வேண்டும். அப்படி செய்தால் தேர்தல் ஆணையம் நடுநிலையுடன் செயல்படுவதாக மக்கள் நம்புவார்கள்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறினார்.

---

### ஆறாவது முறையாக


# மாநிலங்களவை உறுப்பினராக திருச்சி சிவா பொறுப்பேற்றார்!

## ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் – எம்.கிறிஸ்டோபர் திலக் – எல்.கே.சுதீஷ் ஆகியோரும் பொறுப்பேற்றனர்!









புதுடெல்லி, ஏப். 8 -

புதியதாக தேர்வு செய்யப்பட்ட மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு பதவியேற்பு நிகழ்ச்சியானது நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடந்தது.

அதில் தமிழ்நாட்டில் ஆறு இடங்களுக்கு போட்டியின்றி எம்.பி.க்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதில் ஆறாவது முறையாக திருச்சி சிவா (தி.மு.க.) எம்.பி. பொறுப்பேற்றுக் கொண்டார்.

மேலும் ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் (தி.மு.க.), எம்.கிறிஸ்டோபர் திலக் (காங்கிரஸ்), எல்.கே. சுதீஷ் (தே.மு.தி.க.) ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினர்களாக நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கு குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான சி.பி. ராதாகிருஷ்ணன் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.



கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், குறிஞ்சிப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் என்.இராமலிங்கம், ஒன்றியக் கழகச் செயலாளர் வி.சிவக்குமார், பேரூர்ச் செயலாளர் கே.வி.பி.சங்கர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.